(2023-24-ஆம் ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ- மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை – 2)

**SUBJECT CODE** 23PTM209

**REG NO**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : பொள்ளாட்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2024**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## உரையாசிரியர்களும் உரைநெறிகளும்

**பகுதி – அ (10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(K1)**

1. நூலாசிரியரின் அரிய கருத்துகளையெல்லாம் உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது எனக் கூறியவர்

   அ) பண்டிதமணி மு.கதிரேசனார் ஆ) பேராசிரியர் இ) நக்கீரர் ஈ) இரா.மோகன்

2. தலையும் கடையும் பொருள் கூட்டுவது

   அ) விதலை ஆ) விற்பூட்டு இ) பாசி நீக்கம் ஈ) கொண்டு கூட்டு

3. ‘உரைமுதல்வர்’ என்று அழைக்கப்பட்டவர் யார்?

   அ) இளம்பூரணர் ஆ) அடியார்க்குநல்லார் இ) சேனாவரையர் ஈ) பரிமேலழகர்

4. தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு சிறப்பாக உரை எழுதியவர்

   அ) இறையனார் ஆ) அடியார்க்குநல்லார் இ) சேனாவரையர் ஈ) பரிமேலழகர்

5. தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியரின் காலம்

   அ) கி.பி. 16 ஆ) கி.பி. 15 இ) கி.பி. 14 ஈ) கி.பி. 13

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)**

6. உரையாசிரியர்க்கு வேண்டிய பண்புகளுள் ஒன்று எது?
7. வறுமொழியாளன் என்பதன் பொருள். சுட்டுக
8. ‘‘அழிபசி’’ என்பதன் பொருள் தருக.
9. பண்டிதமணியின் திருவாசகப் பேருரையின் சிறப்பு யாது?
10. வியாக்கியானச் சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டவர் யார்?

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ (5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படைகள் உரைகளில் வெளிப்படும் விதம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) உரை நயம் பற்றி விவரிக்க.

12. அ) இளம்பூரணரின் சொல் மற்றும் பொருள்நயங்கள் பற்றி விவரி.

**(அல்லது)**

ஆ) சேனாவரையரின் உவமைத் திறனைப் புலப்படுத்துக.

13. அ) பேராசிரியர் உரையால் உணரலாகும் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) பரிமேலழகரின் பல்கலைப் புலமையை சான்றுடன் விளக்குக.

14. அ) அரும்பதவுரையும், அடியார்க்குநல்லார் உரையும் ஒப்பிடுக.

**(அல்லது)**

ஆ) நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரைத்திறனை விளக்குக.

15. அ) உரைமணி மு.கதிரேச செட்டியாரின் மேற்கோள் காட்டும் திறனை எழுதுக.

**(அல்லது)**

ஆ) பெரியவாச்சான்பிள்ளையின் வடமொழிப்பயிற்சி குறித்து விளக்குக.

**பகுதி - இ ( 5× 8 = 40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.(K4/K5)**

16. அ) உரையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) இறையனார் களவியல் உரை சிறப்பு பற்றி விவரிக்க.

17. அ) இளம்பூரணரின் தொல்காப்பிய உரைத்திறனை மதிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) ‘உரைச் செம்மல் சேனாவரையர்’ என்பதனை நிறுவுக.

18. அ) பேராசிரியரின் உரைநயங்களைத் தொகுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) பாரிமேலழகரின் உரைத்திறனை சான்றுடன் ஆய்க.

19. அ) அடியார்க்கு நல்லாரின் உரை பற்றி விவரிக்க.

**(அல்லது)**

ஆ) நச்சினார்க்கினியரின் உரைநெறி குறித்து கட்டுரை வரைக.

20. அ) உரைமணி மு.கதிரேசன்செட்டியாரின் உரைச் சிறப்பினை ஆராய்க.

**(அல்லது)**

ஆ) பெரியவாச்சான்பிள்ளையின் உரைகளின் தன்மைகளை எடுத்துரைக்க.